DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.14**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | நாகராஜன் |
| Father Name | : | பால்ராஜ் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2025.

(2 எதிரி ஆஜர். 3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது சோலைஅழகுபுரத்தில் குடியிருக்கிறேன். நான் மீனாட்சி பஜாரில் செல்போன் கடை வைத்திருக்கிறேன். இவ்வழக்கின் எதிரி கருணா என்ற கருணாநிதி என்பவரை எனக்கு தெரியும். எதிரி அட்டாக் பாண்டி என்பவரை எனக்கு தெரியும். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 2007ம் ஆண்டில் மீனாட்சி பஜாரில் கடை எண்.15 என்ற விலாசத்தில் சிடி கடை வைத்து நடத்தி வந்தேன் என்றும், அதற்கு பிறகு அங்கிருந்து வியாபாரம் சரியில்லாததால் கடையை காலி செய்துவிட்டேன் என்றும், கடை நடத்தும் போது அட்டாக் பாண்டியின் மைத்துனர் கருணாநிதி என்பவரும் செல்போன் கடை வைத்திருந்தார் என்றும்,

அந்த வகையில் மதுரை ஜெயிலிலிருந்த அட்டாக் பாண்டியை கருணாநிதியுடன் சென்று பார்த்து வருவேன் என்றும், ஒருமுறை பிரவீன் என்பவரும் எங்களுடன் வந்தார் என்றும், அப்போது பிரவீன் என்பவர் தனியாக அட்டாக் பாண்டியுடன் பேசுவார் என்றும், கடந்த 23.11.2015 ம் தேதி பாளையங்கோட்டை ஜெயிலில் அட்டாக் பாண்டியை பார்த்த போது, பிரவீன் ராமகிருஷ்ணன் என்பவரை கத்தியால் குத்திய சம்பவத்தை பேப்பரில் பார்த்தேன் என்று அட்டாக் பாண்டி கருணாநிதியிடம் தெரிவித்து பேசினார் என்றும், நாங்கள் அட்டாக் பாண்டியை பார்க்க போகும் போது, அவருக்கு ஆப்பிள், காரப்பூந்தி, தேன் பாட்டில், பனங்கற்கண்டு, கடுக்காய் பொடி ஆகியவை வாங்கி செல்வோம் என்றும், அதன்பிறகு நான் அவரை பார்த்ததில்லை என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.